ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2273/43 - 2022 මාර්තු මස 30 වැනි බදාදා - 2022.03.30

2273/43 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி - 21/1978 (X) (ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25 அ பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழங்கள் சட்டத்தின் 25 அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 62877 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70 இ என்னும் பிரிவின் கீழ் ஆறிக்கையொன்றைப் பெற்றிருந்து, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2021 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதிய 2208/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை II ஐ, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, அதன் நிரல் I இலும் நிரல் II இன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற “உயிரி தொழில்நுட்பத்தில் கௌரவ விஞ்ஞான இளமானி” என்னும் பதிவை உடனடுத்து இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன்மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி (பிறைவெட்) லிமிட்டெட் ஆனது, கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவக் கௌரவ இளமானி தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்காக மாவணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

1A - PG 5796 — 510 (2022/03)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(அ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் வர்த்தகத் துறையில் மூன்று (03) சாதாரணச் சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமை; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கைநெறியொன்றுடன் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட க.பொ.த. ( உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (03) சதாரணைச் சித்திகள் (S).

2. ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டங்கள்* | *நிரல் II*<br>*பட்டங்களுக்கான சுருக்கீடுகள்* |
|---|---|
| கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் கௌரவ இளமானி | பிஎம் கௌரவ (கணக்கியல் மற்றும் நிதி) |

**தினேஷ் குணவர்த்தன,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
2022, மார்ச் 24.

EOG 03 - 1062

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.